சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 28.07.2025

வா.சா.1 – மாணிக்கம் S/o நாச்சான்

O.S No.225/2021 :

(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் 02.05.2012 தேதியிட்ட அய்யம்மாள் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசலை நான் வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் அய்யம்மாள் தந்தை அவருடைய வாழ்வாதாரத்திற்காக லெட்சுமணன் அவருக்கு எழுதி கொடுத்துள்ள கிரைய ஆவணம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது சூரக்குண்டு கிராமத்தை சார்ந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது மதுரை, திருச்சி-மதுரை சதேசியநெடுஞ்சாலை அருகில் உள்ளது என்றால் சரியல்ல. 2000-3000 அடி தள்ளி இருக்கிறது. நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன்என்றும் வழக்கு சொத்து தேசிய நெடுஞ்சாலைக்கு அருகே இருக்கிறது என்றால் சரியல்ல. நான் நல்லுச்சாமி என்பவர் வீட்டில் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொந்த வீட்டில் இருக்கிறேன். நான் எந்த காலத்திலும் நல்லுச்சாமி விட்டில் குடியிருந்தது கிடையாது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் நல்லுச்சாமி வீட்டில் நான் குடியிருந்த காலத்தில் தான் பிரதிவாதி எனக்கு அறிமுகம் என்றால் சரியல்ல. நல்லுச்சாமிக்கு அய்யம்மாள் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து நல்லுச்சாமி என்ற நபருக்கு இந்த வழக்கின் பிரதிவாதி ஏற்கனவே ஒரு கிரைய ஒப்பந்தம் 3 லட்சத்திற்கு ஏற்படுத்தினார் என்றும் அது நன்கு தெரிந்தும் தெரியாது என்ற மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நல்லுச்சாமியிடம்

கொடுக்கப்பட்ட மூலப்பத்திரம் வா.சா.ஆ.2 ஆவணத்தை பயன்படுத்தி வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி பொய்கட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல. நல்லுச்சாமிக்கு கொடுத்த கடனிற்காக பிடிமானமாக கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை பிரதிவாதி என்னிடம் 5 லட்சம் பெற்றதாக பூர்த்திடித செய்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டை பயன்படுத்தி நல்லுச்சாமியின் தூண்டுதலின்பேரில் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வயது மூத்தவர் என்பதாலும், வழக்கு சொத்து மதிப்பு கூடுதலாக இருப்பதாலும், நானும்,இளவரசு என்பவரும், நல்லுச்சாமி என்பவரும் கூட்டாக செயல்பட்டு பிரதிவாதிக்கு எதிராக பொய்கட்சியாடிவருகிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் அவசர கதியில் நாங்களாகவே எங்களது வசதிக்கேற்ப தகுந்த மறுபயன் இல்லாமல் பூர்ததிசெய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 கடனுறுதி சீட்டானது 10.09.2018 அன்று பூர்த்தி செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து பிரதிவாதி ஆகஸ்ட் 1ல் 5 தேதிக்குள்ளாக 2018ம் ஆண்டு பணம் வேண்டுமென்று என் வீட்டில் வந்து பிரதிவாதி என்னடிம் கேட்டார். என்னிடம் 5 லட்சம் கேட்டார். ஆனால் நான் 6ம் தேதி ஆகஸ்ட் 2018 அன்று அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி 2 லட்சம் ரூபாய் பெ

கொடுத்தேன். 3 லட்சத்தை அடுத்தமாதம் கொடுப்பதாக பிரதிவாதியிடம் சொல்லியிருந்தேன். அய்யம்மாள் உடன் வந்த சினேகலதா என்பவர் தான் வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தை பூர்த்தி செய்தது சுவாமி நாதன் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை 2 லட்சம் ரூபாய் ஆகஸ்டு மாதம் 6ம் தேதி 2018ம் ஆண்டு பெறும் போதே அவர் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டார். அடுத்தமாதம் பாக்கி 3 லட்சம் ரூபாயை பிரதிவாதி பெற்று சென்றுவிட்டார் அப்போது தான் ஆங்கிலதேதியை

கடனுறுதி சீட்டில் போட்டு சுவாமிநாதன் அன்றைக்கு தான் கையெழுத்தும் செய்தார். மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்திருந்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது அவசரகதியில் தமிழ் தேதியெல்லாம் தவறாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது சுவாமிநாதன் எழுதியது ஆகும் தமிழ்தேதி சரியாக தெரியாமல் இருந்தது. மேற்படி ஆவணம் உற்பத்தி செய்ததால் தான் அவ்வாறு தவறாக எழுதப்பட்டுள்ளது என்றா் சரியல்ல. பிரதிவரி என்னிடம் எந்த காலத்திலும் 5 லட்சம் ரூபாய் 2 தவணைகளாக கடன் பெறவுமில்லை அதற்கு ஆதரவாப எந்த கடனுறுதி சீட்டும் எழுதிகொடுக்கவுமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை பிரதிவாதி நேரடியாக எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், அது நல்லுச்சாமி என்பவருக்காக பிணையத்திற்காக கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்றும் அதை தவறாக நான் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றம் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த வழக்கானது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.28 19:13:55 +0530

Sub Judge

Melur